# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. NO. 73/2023**
**PW2**

| | | |
|---|---|---|
| Name | : | பாடலி |
| Father's/Husband's Name | : | ராஜகோபால் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.06.2025.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேத்துபட்டு போளுர் ரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் பாத்திர வியாபாரம் செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவரை சம்பவம் நடந்த அன்று பார்த்தேன். இறந்துபோன ராஜகோபால் என் தந்தை. 18.09.2022 அன்று மதியம் 3.30 மணிக்கு நான் சேத்துபட்டு - போளுர் ரோட்டில் உள்ளஎங்கள் பாத்திர கடையில் இருந்தேன். அதே பாத்திரக்கடையில் என் தந்தை அடகு கடை நடத்தி வந்தார். நானும் என் மனைவி மகேஸ்வரியும் கடையில் இருந்தோம் . 18.09.2022 அன்று மதியம் 3.30 மணிக்கு பழம்பேட்டை, வெங்கடாசலம் தெருவை சேர்ந்த ஆஜர் எதிரி சாமு (எ) மூர்த்தி எங்கள் கடைக்கு தான் அடகு வைத்திருந்த செல்போனை மீட்க வந்தார். பணமும், அடகு வைத்த ரசீதையும் கொடுக்காமல் போனை கொடுக்கமாறு என் தந்தையிடம் தகராறு செய்தார் . என் தந்தை பணம் ரூ . 1200 ம், அடகு வைத்த ரசீதும் கொடுத்தால் போனை கொடுத்து விடுவேன் என்று சொன்னார். அதற்கு எதிரி ரமேஷ் முதலில் போனை கொடு என்று கேட்டார். நானும் என் மனைவியும் அடகு வைத்த ரசீதையும் , பணத்தையும் கொடுத்தால்தான்

போனை கொடுக்க முடியும் சொல்லி அவரை அங்கிருந்து அனுப்பினோம். 5 நிமிடம் கழித்து வந்த எதிரி என் அப்பாவிடம் " முதலில் பொருளை கொடுத்த பணத்தை வாங்கிக்கோடா நாயே , தெவிடியாப்பயை நீ இருக்கமாட்டடா பாஜார்ல " என்று சொன்னார். நானும் என் மனைவியும் , அடகு வைத்த ரசீதையும், ஆதார் அட்டை நகைலையும் எடுத்து வரச்சொல்லி அனுப்பினோம் . சில நிமிடங்களில் திரும்பி வந்த மூர்த்தி ஆதார் அட்டை நகலையும் , ரூ. 1200/- யும் என் தந்தையிடம் கொடுத்து செல்போனை பெற்றுக்கொண்டார். செல்போனை பெற்றுக்கொண்ட எதிரி என் தந்தையின் சட்டையை பிடித்து வலது கையால் முகத்தில் ஓங்கி குத்தி " தெவிடியாப்பையா நான் அடகுவைத்த பொருளை மீட்கறதற்கு பணம் கொடுத்தால்தான்பொருள் கொடுப்பியாடா , செத்துத்தொலடா என்று சொல்லி " என் தந்தை முகத்தில் மூன்று முறை ஓங்கி குத்தினார். பின்னால் இருந்த சுவற்றில் என் தந்தையின் தலையை பிடித்து சுவற்றில் ஓங்கி இடித்தார். ரத்தக்காயம் அடைந்த என் தந்தை சரிந்து கீழே விழுந்தார் . தடுப்பதற்காக நான் அருகில் செல்வதற்குள் மூர்த்தி TN25w5535 என்ற இருசக்கர வாகனத்தில் அங்கிருந்து தப்பிச்சென்றுவிட்டார். என் தந்தையை நானும் , என் மனைவியும் சிகிச்சைக்காக சேத்துபட்டு அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் மருத்துவமனைக்கு,, ஸ்கேன் வசதி இல்லாததால் சென்னை கேளம்பாக்கம் செட்டிநாடு தனியார் மருத்துவமனைக்கு அதேநாள் அழைத்துச்சென்றோம். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அவர் இருந்ததால் நானும் என் மனைவியும் மருத்துவமனையிலேயே இருந்தோம் . 25.09.2022 அன்று சேத்துப்பட்டு காவல் நிலையத்தில் இச்சம்பவத்தை பற்றிஎன் மனைவி புகார் கொடுத்தார். புகார் சம்மந்தமாக 26.09.2022 அன்று உதவி ஆய்வாளர் விசாரித்தார் . நான் நடந்ததை சொல்லிவிட்டு மீண்டும் கேளம்பாக்கம் மருத்துவமனைக்குசென்றேன். அங்கு சிகிச்சையில் இருந்த என் தந்தையின் உடல்நிலை மோசமடைந்ததால் 03.10.2022 அன்று மேல் சிகிச்சைக்காக சென்னை, ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் . அங்கு அவர்04.10.2022 அன்று சிகிச்சை பலனின்றி மாலை 3 மணிக்கு இறந்துவிட்டார். 05.10.2022 அன்று பிரேத பரிசோதனை செய்துவிட்டு பிரேதத்தை எங்களிடம் கொடுத்தார்கள். இது சம்மந்தமாக சேத்துப்பட்டு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் நடந்ததை சொன்னேன்.

**<u>எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யவில்லை.</u>**

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.